(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 45.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 சனவரி 27, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

59/ '15

1\.

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நக்கள்ஸ் ஒதுக்கத்தில் ஏலக்காய் செய்கை நடைபெறுகின்றதென்தையும்;

(ii) இதனால் ஒதுக்கத்துக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மாத்தளை வன பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றதென்பதையும்;

(iv) ஒதுக்கத்தின் அழிவு முழு நாட்டினதும் சுற்றாடல் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஒதுக்கத்தில் காணப்படும் அனுமதியற்ற பயிர்ச்செய்கை நிலத்தின் பரப்பளவு எவ்வளவு;

(ii) அனுமதியற்ற பயிர்ச்செய்கையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளாததேன்;

(iii) ஒதுக்கத்துக்கு ஏற்படும் பாதிப்பை தவிர்ப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) ஏலக்காய் செய்கையை ஒதுக்கத்திலிருந்து அகற்ற நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) ஆமெனில், அது எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒதுக்கத்தில் வாழும் ஓரிடம் சார்ந்த விலங்குகள் மற்றும் தாவரங்கள் தொடர்பான தொகை மதிப்பு இறுதியாக மேற்கொள்ளப்பட்டது எப்போது;

(ii) அதன் பிரகாரம் ஒதுக்கத்தில் வாழ்கின்ற ஓரிடம் சார்ந்த தாவரங்கள் மற்றும் விலங்குகள் யாவை;

(iii) ஏலக்காய் செய்கை காரணமாக ஓரிடம் சார்ந்த தாவரங்கள் மற்றும் விலங்குகளின் அடர்த்தி எவ்வளவு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதென்பதை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அது எத்திகதியில்;

(v) ஏலக்காய் செய்கை காரணமாக ஒதுக்கத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக அறிக்கையொன்றைக் கோருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(vi) ஆமெனில், அது எத்திகதியில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2015/15

2\.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு-அவிசாவளை வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் வெல்லம்பிட்டி சந்தி தொடக்கம் அம்பத்தலே சந்தி வரை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாததால் தினந்தோறும் இவ்வீதியில் அதிக வாகன நெரிசல் நிலவுகின்றதென்பதை அவர் அறிவாரா;

(ஆ) தெற்கு அதிவேக வீதியின், கடுவெல மற்றும் கடவத்த இடைமாறல் ஊடாக பிரவேசிக்கும் வாகனங்களும் இவ்வீதியினூடாக கொழும்பு நகரத்தினுள் பிரவேசிக்க ஆரம்பித்ததைத் தொடர்ந்து வாகன நெரிசல் மேலும் அதிகரித்து வருகின்றமையால், குறிப்பிட்ட வீதியை விரிவாக்கி அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

221/ '15

3\.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்காக,

(i) விண்ணப்பித்திருந்த ஒட்டுமொத்த மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) 150 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(iv) 35 புள்ளிகளுக்குக் குறைவாகப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு மாவட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறுவதற்கான உச்சமட்ட புள்ளிகள் சதவீதத்தையும் குறைந்தபட்ச புள்ளிகள் சதவீதத்தையும் பெற்றுக்கொண்ட 100 பாடசாலைகள் வரிசைக் கிரமப்படி யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பிரசித்திபெற்ற பாடசாலைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட குறைந்தபட்ச புள்ளி மட்டங்கள் மற்றும் அதன் பிரகாரம், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட புலமைப்பரிசில் பெறுநர்களுடைய எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) கடந்த தேர்தல் பிரகடனத்தின் மூலம் 5 ஆம் தர புலமைப்பரிசில் மாணவர் உதவுதொகை அதிகரிக்கப்படுமென வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்தனை பிள்ளைகளுக்கு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

233/ '15

4\.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—( 1 )

(அ) (i) SML Frontier Automotives (Pvt.) Ltd. நிறுவனத்தினால் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டுக்கு லேண்ட் ரோவர் டிபெண்டர் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், வழங்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் இவ்வாகனங்களின் மொத்தப் பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) லேண்ட் ரோவர் வாகனங்களின் சந்தைப்படுத்தலுக்காக இந்நாட்டிலுள்ள முகவர்கள் யாவர்;

(ii) லேண்ட் ரோவர் வாகனங்களைக் கொள்வனவு செய்கையில், வழங்குநரைத் தெரிவு செய்வதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட பெறுகை முறையியல் யாது;

(iii) இவ்வாகனங்களைக் கொள்வனவு செய்கையில், இலங்கை அரசாங்கத்தினால் நாணயக் கடிதங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அது எந்நிறுவனம் சார்பில்;

(iv) மேற்படி நிறுவனம் லேண்ட் ரோவர் வாகன உற்பத்தியாளரா;

(v) இன்றேல், அந்நிறுவனத்தின் பெயர் யாது;

(vi) SML Frontier Automotives (Pvt.) Ltd. நிறுவனத்தின் உரிமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் யாவை;

(vii) இவ்வாகனங்களைக் கொள்வனவு செய்கையில் நடைபெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பில் பொலிஸ் நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாட்டுக்குரிய புலனாய்வின் முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

272/ ' 15

5\.
கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின்போது தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசாங்கத்தினால் எரிபொருள் மீது அறவிடப்படும் வரி நீக்கப்படுமென மக்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டது என்பதையும்;

(ii) 2015 சனவரி 16 ஆம் திகதி அப்போதைய மின்வலு, எரிசக்தி அமைச்சர் எரிபொருள் மீது அறவிடப்படும் வரியை நீக்குவதாக மக்களுக்கு வாக்குறுதியளித்தார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்டவாறு நீக்கப்பட்ட வரி வகைகள் மற்றும் அவற்றின் தொகைகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது எரிபொருள் மீது காணப்படும் வரி வகைகள் யாவை என்பதையும்;

(iii) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.09.30 ஆம் திகதி வரை ஒவ்வொரு வரி வகையின் மூலமும் ஈட்டப்பட்ட வருமானம் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

309/ '15

6\.

கௌரவ ஹேஷா விதானகே,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கொழும்பு, புறக்கோட்டைக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிதக்கும் வர்த்தக நிலையங்கள் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனம் யாது;

(ii) இதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை யாது;

(iii) மேற்படி பணத்தை ஈடுபடுத்திய நிறுவனம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் மொத்த எண்ணிக்கை யாது;

(ii) வர்த்தகர்களுக்கு கையளிக்கப்பட்ட வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தற்போது மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் அரசாங்கம் உழைக்கும் மாதாந்த மொத்த வருமானம் யாது;

(ii) கருத்திட்டத்தினால் நஷ்டம் ஏற்படுகின்றதாயின், குறித்த மாதாந்த நஷ்டம் யாது;

(iii) தற்போது இந்த கருத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா;

(iv) தோல்விகண்டுள்ளதாயின், இதற்கு ஏதுவாயமைந்த காரணிகள் யாவை;

(v) இந்த கருத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான உத்தேச வேலைத்திட்டமொன்று காணப்படுகின்றதா;

(vi) ஆமெனில், குறித்த வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

311/ '15

7\.

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000.11.29 ஆந் திகதி திருகோணமலை பிரதேச கடல் எல்லையில் பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்காகி "துஷாரி" எனப்படும் மீன்பிடிப் படகு அழிவடைந்து, அதிலிருந்த மீனவர்கள் காணாமற்போனார்கள் என்பதையும்;

(ii) கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. ஜீ. பியசேன, தமது ධීජදෙ/ඝැ/02/06ඕආර් ஆம் இலக்க 2003.01.10 ஆம் திகதிய கடிதத்தில், மேற்படி சம்பவம் உண்மையானதெனவும், குறிப்பிட்ட மீனவர்களின் தங்கிவாழ்வோருக்கு நஷ்டஈடு வழங்குவது உகந்ததெனவும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்பதையும்;

(iii) காணாமற்போயுள்ள மீனவர்களில் குமாரகே தொன் பியரத்ன என்பவருக்கு இதுவரையில் நஷ்டஈடு அல்லது மரணச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. பியரத்னவின் விதவையான மனைவி, திருமதி கே.எம். பிரிஜெட் காந்தி, முன்னாள் சனாதிபதி மற்றும் முன்னாள் அமைச்சருக்கு எழுத்து மூலமாக மேன்முறையீட்டை சமர்ப்பித்த போதிலும், இது தொடர்பில் நியாயமான நடவடிக்கையெதுவும் மேற்கொள்ளப்படாமை பாரியதோர் அநீதியாகும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், இவருக்கு நஷ்டஈடு செலுத்துவதற்கும், மரணித்த கணவருடைய மரணச் சான்றிதழை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

315/ '15

8.

கௌரவ விமலவீர திசாநாயக்க,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) அம்பாறை நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் நவகம்புர கிராமத்தில் 25 வீடுகளை நிர்மாணிப்பதெற்கென தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 25 காணித்துண்டுகள் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளை பகிர்ந்தளிக்கும் போது 2008/4 ஆம் இலக்க சுற்றறிக்கையோ அல்லது வசிப்பதற்கு காணிகளை பெற்றுக் கொடுக்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வேறு கட்டளைச் சட்டங்களோ அல்லது முறைசார்ந்த செயல்நடைமுறைகளோ பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(iii) மேற்படி காணிகள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட போதிலும், அதற்கு அம்பாறை பிரதேச செயலாளரிடமிருந்து முறைசார்ந்த அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) பகிர்ந்தளிக்கப்பட்ட காணிப் பயனாளிகளின் பெயர்ப்பட்டியல்களைத் தயார் செய்யும் போது அல்லது சிபாரிசு செய்யும் போது இடம்பெற்றுள்ள அநீதியான நடவடிக்கைகள் காரணமாக, நவகம்புர கிராம வீதியிலும் மற்றும் அம்பாறை நகரத்திலும் வசிப்பதற்கு காணித் துண்டொன்று இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பிலும் முறைசார்ந்த விசாரணையொன்றை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி காணி பகிர்ந்தளிப்பிலுள்ள அநீதியான வேலைத்திட்டம் காரணமாக அம்பாறை நகர சபை ஆளுகைப் பிரதேசத்தின் அ(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளை இழந்துள்ள மக்களுக்கு நேர்ந்துள்ள பாதிப்பைச் சீர் செய்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

322/ '15

9.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அரசாங்கச் செய்தித் திணைக்களத்தினால் ஊடக பேச்சுவார்த்தைகள் மற்றும் ஏனைய விசேட சந்தர்ப்பங்களுக்காக சிற்றுண்டிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் யாவை;

(ii) இதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டதா;

(iii) குறித்த கேள்விப் பத்திரங்களுக்காக விலைகளை முன்வைத்த நிறுவனங்கள், முன்வைக்கப்பட்ட விலைகள் மற்றும் முன்வைக்கப்பட்ட சேவைக் கட்டணங்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வருடங்களில் சிற்றுண்டிகளை வழங்கிய நிறுவனத்துக்கு செலுத்திய சேவைக் கட்டணங்களின் சதவீதம் மற்றும் சேவைக் கட்டணமாக செலுத்திய பணத்தொகை யாது;

(v) 2015 மே 28 ஆம் திகதி முதல் குறித்த நிறுவனத்துக்கு செலுத்திய சேவைக் கட்டண சதவீதம் மற்றும் பணத்தொகை யாது;

(vi) இதன் பிரகாரம், சேவைக் கட்டணமாக மாத்திரம் மேலதிகமாக செலுத்தியுள்ள பணத்தொகை யாது;

(vii) இந்த கொடுக்கல் வாங்கலில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதா;

(viii) ஆமெனில், குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

367/ '15

10.

கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முள்ளிக்குளம் சமூகத்தின் சமூக பொருளாதார, கலாசார, சுற்றாடல், அரசியல் உரிமைகள் அழிக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் தமக்குச் சொந்தமான எதையும் எடுத்துச் செல்லாமல் உடனடியாக அவர்களின் வீடுகளை விட்டுச் செல்லுமாறு இராணுவம் கட்டளையிட்டது என்பதையும்;

(iii) அதன் நிமித்தமாக அவர்கள் கொடூரமாக தம் சொந்த இடங்களை விட்டு இடம்பெயரச் செய்யப்பட்டு கடும் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்பதையும்;

(iv) தம் காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்காக, முள்ளிக்குள மக்கள் பல வழிகளில் முயற்சித்துள்ளதுடன், சனாதிபதி, அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள் பின்னே சென்றுள்ளனர், ஆனாலும் அதிகாரிகள் அவற்றைக் கண்டு கொள்ளாதிருந்தனர் என்பதையும்;

(v) முள்ளிக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமின் காரணமாக, 150 குடும்பங்கள் தம் சொந்த இடங்களை மீளப் பெற்றுக் கொள்ளும் நம்பிக்கையை இழந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களைத் தம் சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவர்களது நீண்ட கால மனக்குறைகளை நிவர்த்திப்பதற்கு உட்கட்டமைப்பு மற்றும் கல்வி வசதிகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

(iii) அவர்கள் மீளக் குடியேற்றப்படாதிருப்பின், அவர்களுடன் கலந்துரையாடி மாற்றுக் காணிகள் வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

61/ '15

11.

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்கின்ற இலங்கையர்களுக்கு பயிற்சியளிக்கின்ற நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பயிலுநர்களுக்கு அரசாங்கம் கொடுப்பனவொன்றை வழங்குவதாயின், அத்தொகை யாதென்பதையும்;

(iii) மேற்படி பயிலுநர்கள் அரசாங்கத்திற்கு ஏதேனும் பணத்தொகையை செலுத்த வேண்டியிருப்பின், அத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பயிற்சி நிலையங்களில் பயிலுநர்களுக்கு இலங்கையினதும் மற்றும் அவர்கள் சேவைக்காக செல்வதற்கு எதிர்பார்க்கின்ற நாட்டினதும் குடிவரவு, குடியகல்வு சட்டங்கள், சுங்கச் சட்டங்கள் மற்றும் செலாவணிச் சட்டங்கள் பற்றிய அறிவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மவுன்ட் கார்மல் கல்வி நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"எஸ்.பீ. நாவின்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம் "

3.

கௌரவ செஹான் சேமசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அனுர விதானகமகே பிரஜா சங்வர்தன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 (அ) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1933/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைஅங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் 17 ஆம் திகதிய 1932/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 செத்தெம்பர் 22 ஆம் திகதிய 1933/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 01 ஆம் திகதிய 1934/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 09 ஆம் திகதிய 1935/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 ஒற்றோபர் 28 ஆம் திகதிய 1938/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 நவெம்பர் 20 ஆம் திகதிய 1941/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் போலந்து குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரி விதிப்பனவை தவிர்ப்பதற்கும் வரி செலுத்தாது தட்டிக்கழிப்பதனைத் தடுப்பதற்குமாக 2015 ஒற்றோபர் 06 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தம் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 97(1) (அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதி,— (136 ஆம் அத்தியாயமான சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2016.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஓகத்து மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

அரசியலமைப்புச் சபையை நியமிப்பதற்கான தீர்மானம்,— ஒத்திவைக்கப்பட்ட விடயம் (சனவரி 09, 2016),— "இலங்கைக்கு புதிய அரசியலமைப்பொன்றை வகுத்தல் அவசியமென இலங்கை மக்கள் மத்தியில் பரந்தளவில் இணக்கப்பாடு காணப்படுவதாலும்;

2015, சனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் போது மக்கள் சட்ட ஒழுங்குக்கு மதிப்பளித்து சனநாயகத்தை வலுப்படுத்தும் அரசியல் கலாசாரமொன்றை தாபிப்பதற்கு தெளிவான மக்கள் ஆணை மக்களால் வழங்கப்பட்டுள்ளதாலும்;

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன, புதிய அரசியலமைப்பை சட்டவாக்கம் செய்து, மற்றும் பலவற்றுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழிப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது வெளிப்படுத்தப்பட்ட மக்களின் விருப்புக்கு வலுவூட்டுவதற்கான தனது அபிலாசையினைத் தெளிவாகக் கூறியுள்ளதாலும்;

மேலும் பல்வேறு விடயங்களுடன் நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறைமையை ஒழித்து, விருப்பு வாக்கு முறைமையை நீக்கி நியாயமான பிரதிநிதித்துவ தேர்தல் முறைமையை உறுதிப்படுத்தி, அனைத்து பிரஜைகளினதும் சனநாயக உரிமைகளை பலப்படுத்தி, தேசிய பிரச்சினைக்கு அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றை வழங்கக் கூடிய, தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தி சட்ட விதியை மதிக்கும் அரசியல் கலாசாரமொன்றை தாபிக்கக் கூடிய, மனித கௌரவத்தை உறுதிப்படுத்தும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுயாதீனத்தன்மைக்கும் உத்தரவாதம் அளித்து பொறுப்புமிக்கதும் வகைகூறக் கூடியமதுமான அரசாங்கமொன்றை மேம்படுத்தும் புதிய அரசியலமைப்பொன்றை சட்டவாக்கம் செய்தல் அவசியமாகின்றதனாலும்;

1. இலங்கையின் புதிய அரசியலமைப்பு பற்றிய மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்று அவற்றைப் பற்றிக் கலந்தாராய்ந்து அரசியலமைப்பின் 75ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்றத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் அதன் பரிசீலனைக்காக அரசியலமைப்பு சட்டமூலத்தின் வரைவைத் தயாரிக்கும் நோக்கத்துக்காக இதனகத்து இதன் பின்னர் 'அரசியலமைப்புச் சபை' என அழைக்கப்படும் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கிய பாராளுமன்றக் குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகர் அரசியலமைப்பு சபையின் தவிசாளராக இருப்பார். அரசியலமைப்பு சபை ஏழு (7) பிரதித் தவிசாளர்களைக் கொண்டதாக இருக்கும் என்பதுடன் அவர்கள் அரசியலமைப்பு சபையினால் தெரிவுசெய்யப் படுதலும் வேண்டும்.

   கௌரவ சபாநாயகர் இல்லாத சந்தர்ப்பங்களில், சபைக்கூட்டங்களின் அமர்வுக்குத் தலைமை வகிப்பதற்கு அரசியலமைப்பு சபையின் பிரதித் தவிசாளர்களுக்கிடையே ஒருவரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

3. அரசியலமைப்பு சபையின் கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் இருபது (20) ஆக இருத்தல் வேண்டும்.

4. (அ) அரசியலமைப்பு சபைக்கான அரசியலமைப்பு சார்ந்த ஆலோசகர்களையும்;

   (ஆ) அரசியலமைப்பு சபைக்கான ஒரு சட்டத்துறைசார் செயலாளரையும் அத்தகைய சட்டத்துறைசார் செயலாளரின் உதவியாளர்களையும்;

   (இ) அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள குழுக்களினதும் நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் நோக்கத்துக்காக அரசியலமைப்பு சபையின் பணியாளர்களையும்; மற்றும்

   (ஈ) அரசியலமைப்பு சபையின் (சமூக ஊடகங்களை உள்ளடக்கிய) ஊடக பணியாளர்களையும் அரசியலமைப்பு சபை கொண்டிருத்தல் வேண்டும்.

ஊடகப் பணியாளர்கள் இணையத்தளம் ஒன்றை நிறுவிப் பேணுவதுடன் இலங்கையின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை முறைக்கு தகுந்த விளம்பரம் வழங்குவதற்குப் பொருத்தமான ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

அரசியலமைப்புச் சபையினதும் அதன் குழுக்களினதும் நடவடிக்கைகளும் அவ்வாறே, பொதுமக்களின் கருத்துக்களும் / சமர்ப்பிப்புகளும் ஆவணப்படுத்தப் படுவதையும் அத்தகைய வேறு தொடர்பான நிபுணத்துவ அல்லது தொழில்நுட்ப அபிப்பிராயங்களுடன் அத்தகைய இணையத்தளங்களில் பிரசுரிக்கப்படுவதையும் ஊடகப் பணியாளர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

5. அரசியலமைப்பு சபை பின்வரும் உப குழுக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) பிரதம அமைச்சர் (தவிசாளர்), பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், நீதி அமைச்சர், மற்றும் அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படுகின்ற அரசியலமைப்பு சபையின் ஏனைய உறுப்பினர்கள் பதினேழு (17) பேரை விஞ்சாத எண்ணிக்கையைக் கொண்டதொரு வழிப்படுத்தும் குழு.

வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் மற்றும் இலங்கையின் புதிய அரசியலமைப்பை வரையும் பணி ஆகியவற்றுக்கான பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்பு சபையினால் நியமிக்கப்படக்கூடிய அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களைக் கொண்ட அத்தகைய ஏனைய உபகுழுக்கள்.

ஆயின், ஒவ்வொரு உப குழுவும் பதினொரு (11) பேரை விஞ்சாதவாறு உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு உப குழுவினதும் தவிசாளர் வழிப்படுத்தும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

6. அரசியலமைப்பு சபை அதன் முதலாவது அமர்வின்போது:—

(அ) பிரதித் தவிசாளர்களைத் தெரிவுசெய்தலும்;

(ஆ) வாசகம் 5 (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களைத் தீர்மானித்தலும்; அத்துடன்

(இ) வாசகம் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் வேண்டும்.

7. அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்காக அரசியலமைப்பின் வரைவொன்றை பிரேரிக்கும் தீர்மானத்தை சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழுவைக் கோரும் அரசியலமைப்பு சபை மேற்கொள்ளவேண்டிய தீர்மானத்தை பிரதம அமைச்சர் அரசியலமைப்பு சபையின் முதலாவது கூட்டத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. அரசியலமைப்பு சபை அதன் அமர்வுகளை பாராளுமன்றச் சபையில் நடாத்துவதற்கு இத்தால் அதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றது:

ஆயினும், மேல் மாகாணத்திற்கு வெளியே ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அதன் கூட்டங்களை நடத்துவதற்கு அரசியலமைப்பு சபை தீர்மானிக்கலாம்:

ஆயின், மேலும் பத்திரங்களைச் சமர்ப்பித்தல், தீர்மானங்களைப் பிரேரித்தல் மற்றும் வாக்களிப்பு ஆகியவை பாராளுமன்றச் சபையிலேயே இடம்பெறுதல் வேண்டும்.

9. அரசியலமைப்பு சபையின் அல்லது ஏதேனும் அதன் குழுவின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான சேவைகளுக்காக எந்தவொரு நிறுவனத்தின் சேவைகளையும் வழிப்படுத்தும் குழு கோரலாம்.

10. அரசியலமைப்புச் சபைக்கு அத்துடன் / அல்லது அதன் பல்வேறு உபகுழுக்களுக்கு உதவுவதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் ஏனைய நிபுணர்களை வழிப்படுத்தும் குழு நியமிக்கலாம்.

11. அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகள் பொதுமக்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைகள் ஆவணப்படுத்தப்பட்டு உடனடியாக வெளியிடப்படுதலும் வேண்டும். பொருத்தமானவிடத்து, அரசியலமைப்பு சபையின் அத்துடன்/ அல்லது அதன் உப குழுக்களின் நடவடிக்கைகளை ஒலிபரப்பு/ஒளிபரப்பு செய்வதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசியலமைப்புச் சபை மேற்கொள்ளுதல் வேண்டும்.

சந்தேகங்களை நீக்குவதற்காக, மேலே சொல்லப்பட்ட விடயங்களை வெளியிடுவதற்கு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரிவு 17இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் விசேட அனுமதி குறிப்பாக வழங்கப்படுதல் வேண்டும் என இத்தால் குறிப்பாகத் தீர்மானிக்கப்படுகின்றது.

சந்தேகங்களை நீக்குவதற்காக, அரசியலமைப்பு சபையினதும் வாசகம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்களின் நடவடிக்கைகள் ஏக காலத்தில் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுவதுடன் இத்தால் குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய நடவடிக்கைகளின் வெளியீடு பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் பிரகாரம் தவறொன்றாக அமையாது எனவும் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

12. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக எந்தவொரு ஆளையும் அரசியலமைப்பு சபையின் முன் வரவழைப்பதற்கான தத்துவத்தை அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

13. கலந்தாலோசிப்பதற்காக அத்துடன் / அல்லது விடயங்களை முன்வைப்பதற்காக அத்துடன் / அல்லது பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் முடிவுகளை அறிக்கை செய்வதற்காக பொதுமக்கள் பிரதிநிதித்துவக் குழுவின் எவரேனும் உறுப்பினரை வரவழைப்பதற்கான தத்துவத்தையும் அரசியலமைப்பு சபை கொண்டுள்ளது.

14. இது தொடர்பான ஏற்பாடுகளுக்கு அமைவாக, அரசியலமைப்பு சபையின் அலுவல்களை நடத்துவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் உபாயங்களையும் தீர்மானிப்பதற்கு அதற்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது:

ஆயின், வழிப்படுத்தும் குழுவின் உடன்பாட்டுடன் பிரதம அமைச்சரால் பிரேரிக்கப்படும் தீர்மானத்தைப் பின்பற்றி அத்தகைய தீர்மானம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்:

பாராளுமன்ற நிலையியல் கட்டளைகளில் இதற்கு முரணாக எவ்வாறிருப்பினும், அரசியலமைப்பு சபையினதும் அதன் உப குழுக்களினதும் நடவடிக்கைமுறை விதிகள் இந்தத் தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.

15. அரசியலமைப்பு சபையின் அலுவல்கள் பற்றிய அறிவித்தல் பிரதம அமைச்சரினால் அல்லது அது பற்றிய வழிப்படுத்தும் குழுவின் அங்கீகாரத்துடன், பிரதம அமைச்சரினால் அத்தகைய நோக்கத்துக்காக காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் அமைச்சரவையின் அத்தகைய அமைச்சரினால் வழங்கப்படுதல் வேண்டும்.

16. வாசகம் 5(ஆ)வில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் அத்தகைய ஒவ்வொரு உப குழுவும் நியமிக்கப்பட்டு பத்து (10) வாரங்களினுள் வழிப்படுத்தும் குழுவுக்கு தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. வாசகம் 5(ஆ)வின் கீழ் நியமிக்கப்பட்ட உப குழுக்களின் அறிக்கைகளையும் பொதுமக்கள் பிதிநிதித்துவக் குழுவின் அறிக்கையையும் பரிசீலித்ததன் மீதாக, வழிப்படுத்தும் குழு அரசியலமைப்பு சபைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

18. அரசியலமைப்பு சபை அதன் பின்னர் அறிக்கையினதும் அரசியலமைப்பு வரைவினதும் (ஏற்புடையதாயின்) பொதுவான அனுகூலங்கள் மற்றும் கோட்பாடுகள் பற்றி விவாதிப்பதுடன் உத்தேச திருத்தங்கள் பற்றியும் விவாதிக்கலாம். அத்தகைய விவாதத்தின் இறுதியில், ‘‘இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தையும் சமர்ப்பிக்குமாறு வழிப்படுத்தும் குழு கோரப்படுமாக’’ என்னும் வினா அக்கிராசனத்தினால் அரசியலமைப்புச் சபைக்கு விடப்படும்.

19. அதன் பின்னர், வழிப்படுத்தும் குழு, விவாதத்தின்போது முன்மொழியப்பட்ட திருத்தங்களை, ஏதேனும் இருப்பின், பரிசீலித்து அரசியலமைப்பு சபையின் பரிசீலனைக்கு இறுதி அறிக்கை ஒன்றையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய இறுதி அறிக்கையும் அரசியலமைப்பு வரைவை உள்ளடக்கிய தீர்மானமும் அரசியலமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரித்தல் வேண்டும்.

20. 18 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவாதத்தின் போது பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

தவிசாளரால் அல்லது தவிசாளர் வருகை தந்திராத சந்தர்ப்பத்தில் எவரேனும் பிரதித் தவிசாளரால் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கம் வரிசைக் கிரமப்படி வாசிக்கப்படல் வேண்டும்.

(i) வாசகமொன்றுக்கு ஏதேனும் திருத்தத்தை மேற்கொள்ளலாம் அல்லது வாசகங்கள் நீக்கப்படலாம் அல்லது புதிய வாசகங்கள் சேர்க்கப்படலாம்.

(ii) விவாதத்தின் இந்தக் கட்டத்தின் போது அரசியலமைப்பு வரைவின் விபரங்கள் அன்றி அதன் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடலாகாது.

(iii) அரசியலமைப்பு வரைவின் ஏதேனும் முன்னைய பகுதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதல்லாத திருத்தங்களைப் பிரேரிக்க முடியாது.

(iv) அரசியலமைப்பு வரைவின் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரும் வரைவு தொடர்பான விவாதம் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னரும் எவரேனுமொரு உறுப்பினர் தவிசாளரின் அனுமதியின் பேரில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட வாசகத்துக்கு திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

(v) வாசகம் ஒன்றுக்கான திருத்தம் பற்றிய வினா முழுமையாக அக்கிராசனத்தினால் பிரேரிக்கப்படாதவிடத்து, வாசகமொன்று பிற்போடப்படலாம்.

(vi) அரசியலமைப்பு வரைவின் மீதி வாசகங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னரும் புதிய வாசகங்கள் கொண்டு வரப்படுவதற்கு முன்னரும் பிற்போடப்பட்ட வாசகங்கள் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(vii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகளை பரிசீலனை செய்யப்படுவதற்கு முன்னர் புதிய வாசகங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதோடு அதனை முதலாவது மதிப்பீடாக கருதுதல் வேண்டும். இதன் தொடரும் வினாக்கள் ''வாசகம் இரண்டாம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்'' மற்றும் ''வாசகம் (அல்லது திருத்தப்பட்டதற்கு அமைவான வாசகம்) அரசியலமைப்பு வரைவில் சேர்க்கப்படும்'' என்பனவாகும்.

(viii) அரசியலமைப்பு வரைவின் அட்டவணைகள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் புதிய அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம் என்பதுடன் இவை புதிய வாசகங்களாகவே கருதப்படல் வேண்டும்.

(ix) எல்லா வாசகங்களும் அட்டவணைகளும் அத்துடன் பிரேரிக்கப்பட்ட புதிய வாசகம் அல்லது அட்டவணைகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், முகவுரை, ஏதேனும் ஒன்று இருப்பின், அது பரிசீலிக்கப்பட்டு 'இது அரசியலமைப்பு வரைவின் முகவுரையாக இருக்குமாக' என்ற வினாவை விடுத்தல் வேண்டும்.

(x) அரசியலமைப்பு வரைவின் பெயரில் ஏதேனும் திருத்தங்கள் அவசியப்படின் மேலே விபரிக்கப்பட்ட நடைமுறைகளின் இறுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பாராளுமன்றத்தின் நிலையியல் கட்டளைகள் 42, 43 மற்றும் 44இன் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் அரசியலமைப்புச் சபையின் நடைமுறைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

22. அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பங்கினர் அரசியலமைப்பு வரைவு தொடர்பான தீர்மானத்தை அங்கீகரிக்காதவிடத்து இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சபையும் குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

23. அரசியலமைப்புச் சபை அரசியலமைப்பு வரைவு பற்றிய தீர்மானத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் அங்கீகரிக்குமிடத்து அறிக்கையும் மற்றும் அரசியலமைப்பு வரைவும் வழிப்படுத்தும் குழுவினால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்பு சபையும் உப குழுக்களும் கலைக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

24. அத்தகைய அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரசியலமைப்பின் 75(ஆ) மற்றும் 120(ஆ) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் அரசியலமைப்பை முற்றுமுழுதாக நீக்கி பதிலீடு செய்வதற்கான சட்டமூலமாக அமைச்சரவை சான்றுபடுத்துவதோடு அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 83ஆம் உறுப்புரையில் தேவைப்படுத்தப்படும் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு கருதப்பட்டு மக்கள் தீர்ப்புக்காக மக்களிடம் சமர்ப்பிக்கப்படும்.

25. இதனை அடுத்து அரசியலமைப்பின் உறுப்புரை 78(1) இன் பிரகாரம் சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

26. அதன் பின்னர், சனாதிபதி அரசியலமைப்பின் உறுப்புரை 154எ(2)இன் பிரகாரம் சட்டமூலத்தை ஒவ்வொரு மாகாண சபைகளின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்காக அத்தகைய அனைத்து சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

27. இதன் பின்னர் பிரதம அமைச்சர் அத்தகைய சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன் அத்தகைய சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

28. மேல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அத்தகைய சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையின் பிரகாரம் விசேட பெரும்பான்மையினால் சட்டமூலம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமாக என பிரதம அமைச்சர் பிரேரிக்க வேண்டும்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் கூறப்பட்ட சட்டமூலத்துக்குச் சார்பாக வாக்களிக்குமிடத்து, சட்டமூலம் விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தினால் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என சபாநாயகர் அரசியலமைப்பின் 79ஆவது உறுப்புரைக்கு அமைய தகுந்தவாறு சான்றுப்படுத்துவதுடன் இலங்கையின் இறைமை உரித்தாக்கப்பட்டுள்ள மக்களினால் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் அங்கீகரிக்கப்படும் வரை, சட்டமூலம் சட்டமாகாது.

29. இதன் பின்னர் அரசியலமைப்பின் 85(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் மக்கள் தீர்ப்பொன்றின் மூலம் மக்களால் அங்கீகரிப்பதற்காக சனாதிபதியினால் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

30. சட்டமூலம் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுமிடத்து, அரசியலமைப்பின் 80(2)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியினால் சட்டமூலம் சான்றுப்படுத்தப்பட்டதன் பின் சட்டமூலம் சட்டமாக மாறும்.

31. அரசியலமைப்புச் சபை மற்றும், 5ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உப குழுக்கள் மற்றும் இந்த தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் மற்றும் ஆலோசகர்களுக்கான செலவினங்கள் திரட்டு நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் 150ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவ்விடயம் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளைப் பாராளுமன்றம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

32. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, அரசியலமைப்புச் சபையினால் பிரேரிக்கப்பட்டவாறு இவ்வாறான அரசியலமைப்புச் சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் அல்லது திருத்தத்துக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளுதல் பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்க வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

33. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு விசேட பெரும்பான்மையினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, பின்னர் அரசியலமைப்பின் 83ஆவது உறுப்புரையில் தேவைப்படுத்தப்பட்டவாறு மக்கள் தீர்ப்பொன்றின் போது மக்களினால் அங்கீகரிக்கப்படுமிடத்து மாத்திரம் அரசியலமைப்பு சட்டமூலம் சட்டமாக்கப்படுதல் வேண்டுமென இத்தால் மேலும் தெரிவிக்கப்படுகின்றது." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 14.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 19.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.